<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 179/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.07.2025..

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் பாலப்பம்பட்டி சின்ன தோட்டத்தில் வசித்து வருகிறேன். பெங்களூரில் IT நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். பெங்களூர் சென்று 4 வருடங்களுக்கு மேலாகிறது. மாதம் ஒருமுறை மற்றும இரு வாரங்களுக்கு ஒரு முறை ஊருக்கு வருவேன். இந்த சம்பவத்தின் போது குடும்பத்துடன் 10 நாட்கள் விடுமுறைக்காக வந்திருந்தேன். பாலப்பம்பட்டி சின்ன தோட்டத்தில் எங்களுக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த தோட்டத்தில் என் அம்மா சரஸ்வதி அப்பா ஆறுமுகம் என்பவரும் குடியிருந்து வருகிறார்கள். நான் விடுமுறையில் வந்திருந்த போது அக்கா விஜயா மற்றும் மச்சான் மகுடீஸ்வரனும் வந்திருந்தார்கள். எங்களுக்கு பக்கத்து தோட்டத்தில் காளிமுத்து, வெங்கடாசலம், செந்தில்குமார் ஆகியோருக்கும் எங்களுக்கு வழித்தட பிரச்சனை இருந்தது. விடுமுறையில்வ ந்த நாளில் எங்களது பட்டா பூமியில் புதியதாக கிணறு வெட்டிருந்தார்கள். அப்போது நானும் எனது அம்மாவும் கிணற்றின் மேல்

பகுதியில் சுததம் செய்து கொண்டிருந்தோம். கிணற்றை சுற்றி பாதுகாப்பிற்காக மண் ஏரி அமைத்து கரை கட்டியிருந்தோம். நான் வேலை செய்து கொண்டிருந்த போது வெங்கடாசலம் என்பவர் டிராக்டரில் வந்தார் அந்த வாகனத்தின் எண் TN 57 AE 5434 ஆகும் . அவர் வேகமாக வந்து மண் கரை மீது ஏற்றி அதை உடைத்து விட்டார். நாக்ஙள அந்த சமயத்தில் அருகில் தான் இருந்தோம் டிராக்டர் அருகில வந்த போது தள்ளி நின்று விட்டோம். அப்போது வெங்கடாசலம் உடன் அவரது அப்பா காளிமுத்து என்பவரும் அவரது அண்ணன் செந்தில்குமாரும் உடன் இருந்தனர். அப்போது பாதுக்காப்பிற்ககாக போடப்பட்ட மண் கரையை ஏன் இடித்திர்கள் என்று வெங்கடாசலத்திடம் கேட்ட போது வெங்கடாசலம் டராக்டரை விட்ட இறங்கி வந்து என்னிடம் வந்து அப்படிதாண்டா தேவிடியா பயலே கரையை இடிப்போம் நீ என்னடா புடுங்குவே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். காளிமுத்து மற்றும செந்தில்குமாரை ஆகிய இருவரும் வந்தனர். காளிமுத்து இரண்டு பேரையும் பார்த்து இவனை அடிங்கடாஎன்று என்னை பார்த்து கூறினார். அவர்களை என்னை அடிக்க அவர் துாண்டி விட்டார். காளிமுத்து என்னை இழுத்து கீழே தள்ளி விட்டார். நான் கீழே விழுந்து விட்டேன். செந்தில்குமார் என் முகத்திலும் தலையிலும் கையால் ஓங்கி ஓங்கி குத்தினார். அதில் நான்கீழே விழுந்து விட்டேன். என்னால் எழ முடியவில்லை. அப்போது வெங்கடாசலம் அங்கு வந்து கையால் அடித்து செருப்பு காலால் மிதித்தும் எனது வலது கையின் தோள்பட்டையில் 15 முறை மிதித்தார். உதைத்து கொண்டே இருந்தார். என்னை அடிப்பதை பார்த்து என்அம்மா விலக்கி விட வந்தார். காளிமுத்து எனது அம்மாவைகீழே தள்ளி விட்டார். அவ்ருக்கு கீழே விழுந்தவுடன் அவருக்கு நெஞ்சு பகுதியில் அடிப்பட்டது. கையில் இரத்த காயம் ஏற்பட்டது. அப்போது பக்கத்தில் இருந்தவர்கள் விஜயா மகுடீஸ்வரன் ஆனந்த் ஆகியோ'ர் தடுக்க ஓடி வந்தனர். அப்போது வெங்கடாசலம் என்பவர் அவர்கள்வந்ததால் நீ தப்பித்து விட்டார்என்னைக்கு இருந்தாலும் என் கையில் தான் கொலை விழுகும் என்று மிரட்டி விட்டு டிராக்டரை எடுத்து மூவரும் ஓடிவிட்டனர். என்னை கோகுல் பாலிகிளினிக்மருத்துவமனையில் மகுடீஸ்வன் சிகிச்சையில் சேர்த்ததார். எனது அம்மாவை உடுமலை அரசு மருத்துவமனையில சிகிச்சையில் சேர்த்தார்கள். சிகிச்சையில் இருந்த போது போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டடப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது.** கோகுல் பாலிகிளினிக்கில் என்னை பரிசசோதித்த மருத்துவர்கள் வலது கை தோள்பட்டை சதை மற்றும் எலும்பு விலகி இருப்பதாக X ray எடுத்து பார்த்து முதலுதவி செய்து விட்டு அறுவை

சிகச்சை செய்வதற்காக கங்கா மருத்துவமனைக்கு 3 நாட்கள் கழித்து சிசிக்சைக்கு சென்றேன். அங்கு 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அங்கு ஸ்கேன் எடுத்து பார்த்துவிட்டு 18.05.2023 ம் எனக்கு அறுவை சிகிக்சை செய்து ஸ்குரு பொறுததினார்கள். 6 மாத காலத்திற்க வண்டி வாகனம் இயக்க இயலாதுஎன்று மருத்துவர்கள் அறிவுரை சொன்னார்கள். கோகுல் பாலிகிளினிக் மற்றும கங்கா மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்து கொண்ட X ray , ஸ்கேன் மற்றும் discharge summary ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். போலிசார் என்னை கங்கா மருத்துவமனை வந்தும் விசாரித்தார்கள்..

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**</u>

வழக்கறிஞருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 179/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரஸ்வதி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுக கவுண்டர் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.07.2025..

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் பாலப்பம்பட்டி சின்ன தோட்டத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன்.பாலப்பம்பட்டி சின்ன தோட்டத்தில் நாங்கள இருவரும் தான் உள்ளோம். எனக்கு 2 மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளார்கள். மூத்த பிள்ளையின் பெயர் விஜயமணி ஆகும அவரை மயிலாம்வரத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். எனது மருமகன் பெயர் மகுடீஸ்வரன். மகன் பெயர் பாலசுப்பிரமணி. அவர் குடும்பத்துடன் பெங்களுரில் தங்கி வேலை செய்து வருகிறார்.

2. சித்திரை மாதம் 28 ம் தேதி வியாழக்கிழமை ஆங்கில மாதம் தேதி வருடம் ஞாபகம் இல்லை. இன்றைய தேதியிலிருந்து 2, 3 மாதத்திற்கு முன் நடந்தது. 10 நாட்கள் லீவில் எனது மகன் குடும்பத்துடன் வந்திருந்தார். அவர்களை பார்ப்பதற்காக எனது மகள் மற்றும் மருமகன் வந்திருந்தார்கள். எங்கள் பட்டா பூமியில் கிணறு வெட்டியிருந்தோம். அதற்கு அருகில் நானும் எனது மகனும் வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது வெங்கடாசலம் டிராக்டரில் வேகமாக வந்து ஏரியை அழித்தார். அவருடன் அப்பா காளிமுத்து அண்ணன்

செந்தில்குமார் ஆகியோர் வந்தார்கள்.

3. நாங்கள் ஏரியை ஏன் அழிக்கிறிர்கள் என்று கேட்டதற்கு வெங்கடாசலம் கோத்தா தேவிடியா மகளே என்று தகாத வார்த்தையால் திட்டினார். காளிமுத்து அடிக்க சொல்லி வெங்கடாசலம் தகாத வார்த்தையால் பேசி தீர்த்து கட்டி விடுவேன் என்று சொன்னார் எனது மகன் பாலசுபபிரமணியத்தை மூவரும் அடித்து உதைத்தனர். செந்தில்குமார் வெங்கடாசலம் ஆகியோர்கள் தலை மூஞ்சி பகுதியில் சோத்தான் கையில் நெஞ்சு பகுதியில் செருப்பு காலால் மிதி மிதினுமிதித்தனர்.

4. செந்தில குமார் ஓங்கி ஓங்கி அடித்தார். எனது மகனுக்கு கை துாக்க முடியவில்லை. குறுக்காட்டிய என்னை காளிமுத்து பிடித்து கீழே தள்ளி விட்டார் அதனால் எனக்குஇடுப்பு மற்றும் நெஞ்சு பகுதியில் வலித்தல் ஏற்பட்டது. வலது கையில் நகக்கீறல் காயம் ஏற்பட்டடது. எனது மகள் விஜயா மகுடிஸ்வரி ஆனந்தன் ஆகியோர் ஓடி வந்தார்கள். அவர்களை பார்த்ததும் மூவரும் டிராக்டரை எடுத்து கொண்டு ஓடி விட்டனர்.

5. அப்போது வெங்கடாசலம் எங்களை பார்த்து என்கையால் தான் சாவு என்று கொலைமிரட்டல் விடுத்து சென்றார். எனது மகள் மற்றும் மருமகன் காரில் வந்து எங்களை அழைத்து சென்று மருத்துவமனையில் சேர்த்ததார்கள். எனது மகனை வாசுதேவன் மருத்துவமனையில் சேர்த்தார்கள் நான் உடுமலைஅரசு மருத்துவமனயில் சேர்ந்தேன். 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். எனது மகனுக்கு மேல் சிகிச்சைக்காக கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பினர்கள். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை நடந்தது. இது சம்பந்தமாக எனது மகன்புகார் கொடுத்தார். மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

வழக்கறிஞருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.